## அரசியல் சட்டத்திற்கு முரணாகச் செயல்படுகிறார்! சட்டமன்ற மாண்பைக் குறைக்கிறார்!

# அத்துமீறும் தமிழ்நாடு ஆளுநர்!

## ‘தி இந்து’ நாளேட்டின் வலுவான தலையங்கத்தைச் சுட்டிக்காட்டி

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, பிப்.15-

**‘தி இந்து’ ஆங்கில நாளேட்டின் வலுவான தலையங்கத்தினை சுட்டிக்காட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் “அத்துமீறும் ஆளுநருக்குக் கண்டனம்” என தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாடு ஆளுநர் பதவியில் தொடர தார்மிக உரிமை இல்லை என ‘தி இந்து’ நாளிதழின் வலுவான தலையங்கத்தில் எழுதியுள்ளதைச் சுட்டிக்காட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:-

**தமிழ்நாடு ஆளுநரின் அரசியல் சட்டத்திற்கு முரணான அத்துமீறல்களும், பா.ஜ.க தலைமையிலான ஒன்றிய அரசின் கீழ்த்தரமான ஒப்புதலும் உச்சநீதிமன்றத்தால் சரியாகவே வலியுறுத்தப்பட்டுள்ளன.**

**வலுவான வார்த்தைகள் கொண்ட தலையங்கம், தமிழ்நாடு ஆளுநர் தன்னிச்சையாக சட்டமன்றத்தின் மாண்பையும் மதிப்பையும் குறைக்கிறார் என்பதையும், பதவியில் தொடர அவருக்கு தார்மீக அதிகாரம் இல்லை என்பதையும் மீண்டும் வலியுறுத்துகிறது.**

**இந்தியா முழுவதிலும் உள்ள முன்னணி செய்தித்தாள்கள் மற்றும் அரசியலமைப்பு வல்லுநர்களின் தொடர்ச்சியான கண்டனங்கள் மூலம் மாநிலத்தின் தலைவரான ஆளுநரோ, டெல்லியில் உள்ள அவரது பா.ஜ.க. எஜமானர்களோ எதையும் கற்றுக் கொள்ளவில்லை என்பது திகைப்பூட்டும் விஷயம். இடையூறு விளைவிக்கும் வகையில், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்களின் அருவருப்பான மற்றும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமானச் செயல்களை ஒழுங்குபடுத்துவதற்குப் பதிலாக, ஒன்றிய அரசு அரசியல் எதிரிகளை பழிவாங்குவதற்காக இத்தகைய அதிகப்படியான செயல்களுக்கு வெகுமதி அளிக்கிறது.**

இவ்வாறு “தி இந்து” நாளிதழில் நேற்று முன்தினம் (13.2.2025) வெளிவந்துள்ள தலையங்கத்தை மேற்கோள் காட்டி தனது x வலைதளப் பகுதியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்கள்.



**‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கம்!**

வேண்டுமென்றே விதிமீறலில் ஈடுபடும் தமிழ்நாடு ஆளுநரின் நடத்தை குறித்து: ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் நேற்று முன்தினம் (13.2.2025) எழுதப்பட்ட தலையங்கம் வருமாறு:


இந்திய உச்ச நீதிமன்றம் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எழுப்பிய கூர்மையான கேள்விகள், அவர் வேண்டுமென்றே தனது அரசியலமைப்புக் கடமையில் இருந்து மீறியதை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளன. அவர் முன்பு “ஒப்புதல் வழங்காமல்” வைத்திருந்த சட்டமசோதாக்களை, மாநிலச் சட்டமன்றம் மறுபடியும் நிறைவேற்றியபோது, அரசியலமைப்பின்படி அவற்றுக்கு ஒப்புதல் வழங்க வேண்டும் என்பதற்குப் பதிலாக, அவற்றைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பியதன் சட்டபூர்வத் தன்மை தொடர்பான கேள்விகள் எழுப்பப்பட்டன.

“சட்டப்பிரிவு 200இன் முதல் விதியின்படி, ஒப்புதல் வழங்காமல் தவிர்ப்பதற்காகவே ஆளுநர் ரவி இந்தச் சட்டமசோதாக்களைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பியிருக்கிறாரா?” என நீதிமன்ற பெஞ்ச், அனைவரின் சார்பாகவும் கேள்வி எழுப்பியது. முன்பு, ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தால், அந்த மசோதாவின் ஆயுள் முடிந்ததாகக் கருதப்பட்டது. ஆனால், 2023ஆம் ஆண்டு நீதிமன்றத் தீர்ப்பின்படி, ஆளுநர்கள் இப்படிச் செயல்படும்போது, அந்த மசோதாவைச் சட்டமன்றத்திற்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்பதும், சட்டமன்றம் மறுபடியும் நிறைவேற்றினால், அவற்றுக்குக் கட்டாயம் ஒப்புதல் வழங்க வேண்டும் என்பதும் தெளிவுபடுத்தப்பட்டது.

நீதிமன்றத்தின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதமாக, இந்தியத் தலைமை வழக்கறிஞர் “மத்திய சட்டத்துடன் முரண்பாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது” எனக் கூறினார். குறிப்பாக, இந்தச் சட்டமசோதாக்கள் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் நியமன முறையை மாற்றுவதால், யுஜிசி விதிமுறைகளுடன் முரண்படும் என்பதால், ஆளுநர் அவற்றைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பியது சரியானது என அவர் வாதிட்டார். மேலும், முன்னர் ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தபோது, அந்த மசோதாக்கள் செல்லுபடியாகாமல் போய் விட்டதாகவும், அவற்றை ஆளுநர் திருப்பி அனுப்பியதாகக் கருதிச் சட்டமன்றம் மீண்டும் நிறைவேற்றியது எனவும் அவர் தெரிவித்தார். மேலும், மசோதாவில் முரண்பாடு இருக்கிறதென்றால், அதைத் திருப்பி அனுப்பத் தேவை இல்லை என்றும் அவர் வாதிட்டார். ஆளுநர்கள் சட்டமசோதாக்களை எதிர்கொள்ளும் போது எந்த வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் இந்த வாதங்கள் ஆர்வமூட்டும் வகையில் இருக்கலாம். தீர்ப்பை வழங்கவுள்ள நீதிமன்ற பெஞ்ச் இதற்கான பதில்களை வழங்கும் என எதிர்பார்க்கலாம். எனினும், சட்டங்களை முடக்குவதற்காக ஆளுநர் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி வருவது வெளிப்படையாகத் தெரிகிறது.

இவற்றில் சில சட்டமசோதாக்கள் மீது அவர் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அத்தோடு, ஒப்புதல் மறுத்தபோது முரண்பாடு சார்ந்த அவரது கருத்துகளையும் வெளிப்படுத்தவில்லை. மேலும், சட்டமன்றம் அவற்றை இரண்டாவது முறையாக நிறைவேற்றி அனுப்பியபோது, அவற்றுக்குக் கட்டாயம் ஒப்புதல் வழங்க வேண்டும் என்ற சட்டக் கட்டுப்பாட்டையும் அவர் உதாசீனப்படுத்தி, அவற்றைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பினார்.

2023ஆம் ஆண்டில் நடந்த ஒரு விசாரணையிலும், “ஆளுநர் ஒப்புதல்



THE HINDU

Wilful violation

Supreme Court's queries expose pattern of obstinacy in T.N. Governor's conduct

The Supreme Court of India's probing questions to the Tamil Nadu Governor, R.N. Ravi, have exposed a pattern of wilful violation of constitutional duty on his part. The questions related to the lawfulness of Mr. Ravi's act in referring to the President of India a set of Bills for which he had earlier "withheld assent", but was constitutionally bound to grant assent after their adoption for a second time by the State Assembly. The Bench was speaking on behalf of everyone when it asked whether Mr. Ravi had referred these Bills to the President only to avoid granting assent, as required by the first proviso to Article 200 of the Constitution. The earlier understanding that the withholding of assent puts an end to the life of a Bill was altered by the Court's judgment in 2023, holding that whenever Governors opt for that course of action, they

அளிக்காமல் நிறுத்தி வைக்கும் விருப்பத்தைத் தேர்வு செய்த பிறகு, அதே மசோதாவைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பும் மற்றொரு தேர்வை பயன்படுத்தலாமா?” என்ற கேள்வியை நீதிமன்றம் எழுப்பியது. திரு. ரவி, தனக்கு ஏற்பில்லாத எந்தச் சட்டத்தையும் நிறைவேற விடாமல் தடுக்கும் நோக்கில் இருப்பது வெளிப்படையாகிறது. அவர் தனது பதவியில் தொடர்வதால் தமிழ்நாட்டில் அரசியலமைப்பு ஆட்சிமுறைக்கு ஏற்படும் சவால்களை ஒன்றிய அரசு கவனிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

இவ்வாறு ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டின் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காத விவகாரம்!

# ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் எழுப்பியிருக்கும் 12 முக்கிய கேள்விகள்!



புதுடெல்லி,பிப்.15-

**ஆளுநர் ஆர்.என்.ரவி சட்டப்பேரவை மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காத விவகாரத்தில் அவருக்கு எதிராக தமிழ்நாடு அரசு தரப்பில் இரண்டு ரிட் மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதேபோன்று துணைவேந்தர் நியமனம் தொடர்பான விவகாரத்திலும் ஒரு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதுதொடர்பான அனைத்து வழக்கையும் விசாரித்த உச்ச நீதிமன்றம் வாதங்கள் அனைத்தையும் பதிவு செய்து கொண்டு தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் கடந்த 10ஆம் தேதி ஒத்திவைத்திருந்தது.**

**மேலும் வழக்கு தொடர்பாக அனைத்துத் தரப்பும் எழுத்துப்பூர்வ வாதங்களை தாக்கல் செய்யவும் உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில் ஆளுநர் ஆர்.என்.ரவி தொடர்பான வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் நகலானது அதன் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.**

அதில் ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக சுமார் 12 கேள்விகளை உச்ச நீதிமன்றம் எழுப்பியுள்ளது.

1. சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாவை ஆளுநர் திருப்பி அனுப்பி, பின்னர் மீண்டும் அந்த மசோதா திருத்தங்களுடனோ அல்லது திருத்தங்கள் இல்லாமலோ நிறைவேற்றப் பட்டு மீண்டும் ஆளுநரின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டால், அதனை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பி வைக்க முடியுமா? அதற்கான அதிகாரம் ஆளுநருக்கு உள்ளதா?.
2. குடியரசுத் தலைவருக்கு மசோதாவை அனுப்பி வைக்க ஆளுநர் முடிவெடுத்தால் அது அனைத்து மசோதாக்களுக்கும் பொருந்தக் கூடியதா? அல்லது குறிப்பிட்ட மசோதாக்களுக்கு மட்டுமா?
3. அதேபோன்று ஆளுநருக்கான தனிப்பட்ட அதிகாரத்தின் செயல்பாடுகள் என்றால் என்ன. அது முன்னதாக விவரிக்கப்பட்ட அரசியல் சாசன பிரிவுகள் 111, 200 மற்றும் 201ன் மூலம் உறுதி செய்யப்படுகிறதா?.
4. அரசியல் சாசன பிரிவு 200ன் கீழ் ஆளுநர் என்பவர் அமைச்சரவையின் ஆலோசனையைக் கேட்டு தான் நடக்க வேண்டுமா அல்லது அவர் தன்னிச்சையாக முடிவுகளை மேற்கொள்ள முடியுமா?.
5. சட்டப்பேரவை ஒரு மசோதாவை நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைக்கிறது. ஆனால் ஆளுநர் அதை நிறுத்தி வைத்தால் அதே மசோதாவை மீண்டும் சட்டப்பேரவை நிறைவேற்றி ஆளுநரிடம் சமர்ப்பிக்கும் போது ஆளுநர் அந்த மசோதாவை என்ன செய்ய முடியும்?
6. அரசியல் சாசனப் பிரிவு 200ன் அடிப்படையில் மசோதாக்களின் மீது முடிவெடுக்க ஆளுநருக்கு கால நிர்ணயம் ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா?.
7. மறுமுறை சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதா குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தால் மசோதாவுக்கான ஒப்புதலை கட்டாயம் வழங்க வேண்டுமா அல்லது அதற்கான அவசியம் கிடையாதா?
8. அரசியல் சாசன பிரிவு 200ன் கீழ் நான்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா?
9. குறிப்பிட்ட அந்த மசோதாக்களை குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிப்பதற்கு ஆளுநருக்கு என்று எத்தகைய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது?
10. குறிப்பாக சட்டப்பேரவை மூலம் நிறைவேற்றப்பட்டு மசோதா ஆளுநரிடம் இருந்து குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கும் போது, குடியரசுத் தலைவர் ஒன்றிய அரசின் கீழ் செயல்பட்டாலோ அல்லது அவர்களது பரிந்துரையின் அடிப்படையில் மசோதா நிராகரிக்கப்பட்டால், அரசியல் சாசனத்தின் எந்த விதிகளின் அடிப்படையில் விஷயத்தைக் கையாள முடியும்?
11. குடியரசுத் தலைவர் மசோதாவை மீண்டும் ஆளுநருக்கு அனுப்பி சட்டப்பேரவையை முடிவெடுக்க அறிவுறுத்துமாறு ஆளுநரை கேட்டுக்கொள்கிறார் என்றால், அதே மசோதாவை ஆளுநர் மீண்டும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்க முடியுமா?
12. அரசியல் சாசனப் பிரிவு 200ன் கீழ் ஆளுநர் தனது விருப்பத்தின் படி முடிவெடுத்து செயல்பட முடியுமா அல்லது முடியாதா?

மேற்கண்ட அனைத்து கேள்விகளுக்கும் வழக்கில் தொடர்பு டைய அனைவரும் எழுத்துப்பூர்வ வாதங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# சென்னை - திருவண்ணாமலை இடையே வந்தே பாரத் ரயில்!

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கோரிக்கை!

திருவண்ணாமலை, பிப்.15-

தென்னகத்து கயிலாயம் என போற்றப்படும் திருவண்ணாமலை பஞ்ச பூத தலங்களில் அக்னி தலமாக அமைந்துள்ளது. எனவே, அண்ணாமலை யார் திருக்கோயிலை தரிசிக்கவும், கிரிவலம் சென்று வழிபடவும் தமிழ்நாடு மட்டு மின்றி வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வருகின்றனர். குறிப்பாக, கடந்த சில ஆண்டுகளாக திருவண் ணாமலைக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை பல மடங்காக உயர்ந்திருக்கிறது. எனவே, போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவது அவசியமாகி உள்ளது.

எனவே, திருவண்ணாமலை எம்.பி. சி.என்.அண்ணாதுரை, மக்களவையில் தொடர்ந்து வலியுறுத்தி, ரயில்வே துறை அமைச்சரை பல முறை நேரில் சந்தித்து கோரிக்கை மனுக்கள் அளித்ததன் காரணமாக கடந்த ஒரு ஆண்டாக பவுர்ணமி நாட்களில் 2 சிறப்பு ரயில்கள் மட்டும் இயக்கப்படுகிறது. இந்நிலையில், திருவண்ணாமலை சென் னைக்கு தினசரி வந்தே பாரத் ரயில் இயக்க வேண்டும் என மக்களவையில் எம்பி அண்ணாதுரை கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக, கேள்வி நேரத்தின்போது அவர் தெரிவித்திருப்பதாவது:



திருவண்ணாமலை பிரசித்தி பெற்ற சிவாலயம் அமைந்த நகரம். இங்குள்ள அண்ணாமலையார் திருக்கோயிலை தரிசனம் செய்யவும், கிரிவலம் செல்லவும் ஏராளமான பக்தர்கள் வருகின்றனர்.

எனவே, வந்தே பாரத் ரயில் சேவை திருவண்ணாமலை நகருக்கு மிக அவசியமாகும். ஆன்மிக சுற்றுலா பயணிகளின் வசதிக்காக, சென்னை திருவண்ணாமலைக்கு வந்தே பாரத் ரயிலை இயக்க வேண்டும். அதேபோல், திருவண்ணாமலை தொகுதிக்கு உட்பட்ட ஜோலார்பேட்டை ஜங்ஷன் வழியாக தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கு ரயில்கள் இயக்கப்படுகிறது. எனவே, சென்னையில் இருந்து ஜோலார் பேட்டைக்கு வந்தே பாரத் மெட்ரோ ரயில் இயக்க ரயில்வே துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.